**டாக்டர் அ. ஸ்ரீதரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக 10, 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் போடப்பட்ட சட்டங்களைப் பொறுத்தவரையில், தற்போது வளர்ந்துவரும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமைகள், மாற்றங்கள் ஆகியவற்றிற்கேற்ப அதில் சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்து அவற்றை இந்த அவையிலே நிறைவேற்றுகிற வகையில் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களின் பணி மற்றும் நிலைமைகளைக் கவனிப்பதற்கென்று, 1951 ஆம் ஆண்டு தோட்டத் தொழிலாளர் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டம் தோட்ட நிறுவன ஆய்வாளர்களால் அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வெ. பழனிசாமி.

**திரு. வெ. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்காக குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறதா ; அது எப்போது உருவாக்கப்பட்டது ; அதற்கு உண்டான கூலி சரியாகக் கொடுக்கப்படுகிறதா ; சட்ட உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தோட்டத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 296, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**296--**

**கொடுமுடி ஒன்றியத்தில் சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்.**

***19505–திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

*1994 ஏப்ரல் 18*]

மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொல்லங்கோவில் பேரூராட்சி, கந்தசாமிபாளையத்தில் கடைவீதிப் பகுதியில், பேரூராட்சி அலுவலகம் முன்பகுதியிலிருந்து குமாரபாளையம்-ஊஞ்சலூர் ஊரகச்சாலைப் பகுதியில் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அமைந்துள்ள சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள ஊரகச் சாலைப் பகுதியில் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படும் வகையில் அமைந்துள்ள சாலைப் புறம்போக்கு ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் தற்போது அகற்றப்பட்டுவிட்டன.

**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மொடக்குறிச்சித் தொகுதி, கொடுமுடி ஒன்றியம், கொல்லங்கோவில் பேரூராட்சி அலுவலகம், கந்தசாமி பாளையத்தில் இருக்கிற காரணத்தால், குமாரபாளையம்- ஊஞ்சலூர் ஊரகச்சாலையைச் சுற்றிலும் குடிசைவாழ் மக்கள் குடிசைகளைப் போட்டுக் கொண்டு ஆக்கிரமிப்பு செய்து வந்த காரணத்தாலும், அலுவலகத்திற்கு இடையூறுகள் ஏற்படுத்தியதற்குப் பிறகு, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து குடிசைவாழ் மக்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றிய பிறகும்கூட, மீண்டும் தங்களுக்கு இருக்க இடம் இல்லை என்ற கோரிக்கையை வைத்து, அந்த இடத்திற்குப் பின்புறம் சந்தைக்கு அருகிலே கிட்டத்தட்ட 50 குடிசைவாழ் மக்கள் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டு, போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்திருக்கிறபடியால், ஆக்கிரமிப்புகளை அகற்ற உதவிபுரிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த மக்களுக்கு வேறு ஒரு இடத்தை தேர்வு செய்து, அவர்கள் குடிசை அமைத்துக் கொண்டு வசிப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆக்கிரமிப்புகளை அகற்றுகின்றது சம்பந்தமாகக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டிருக்கின்றன. தற்போது அந்த ஆக்கிரமிப்பாளர்களுக்குத் தனியாக இடம் வேண்டுமென்று கேட்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சம்பந்தப்பட்ட துறையை அதற்காக அணுகவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி கவிநிலவு தர்மராஜ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி அலுவலகத்தைச் சுற்றி இருக்கிற பகுதிதான் அந்த மக்கள் வசிப்பதற்கு ஏற்ற பகுதி என்று சொல்லி மற்ற இடத்திற்குச் செல்ல மறுத்துக் கொண்டிருக்கிற காரணத்தால், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சந்தைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற 2 ஏக்கர் நிலத்திலே 50 சென்ட்கூட சந்தைக்கு உபயோகிக்கப்படாமல் இருக்கிற காரணத்தைப் பயன்படுத்தி அந்த மக்களுக்கு அந்த இடத்தில் ஒவ்வொரு சென்ட் கொடுத்து அவர்கள் இருப்பதற்கு குடிசை அமைத்துக் கொடுப்பதற்கு ஆலோசனை வழங்கி சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி எங்களுக்கு நல்ல பதிலைத் தெரிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற நிலம் பேரூராட்சி சந்தைக்கு உட்பட்ட நிலமாக இருக்கிற காரணத்தால், சந்தைக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிற நிலம் வீட்டுமனைக்காக பிரிக்கப்பட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அவர்களுக்கு மாற்று இடம் வழங்குகின்ற இந்தக் கோரிக்கை சம்பந்தமாக சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் எழுத்து மூலமாக எழுதிக் கொடுப்பார்கள் என்று சொன்னால், எவ்வளவு நபர்கள் இருக்கிறார்கள்; எவ்வளவு பேருக்கு அந்த இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் தெளிவாக குறிப்பிட்டுச் சொல்வார்கள் என்று சொன்னால், அதற்குண்டான நடவடிக்கையை எடுப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினா எண் 297, திருமதி கே. பஞ்சவர்ணம், இருக்கையில் இல்லை.

வினா எண் 298, திரு. வி. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

வினா எண் 299, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

**299–**

**தமிழகத்தில் மீன் அருங்காட்சியகங்கள் அமைத்தல்.**

***17579-திருமதி கே. மரியம் உல் ஆசியா:**